வரையில் மருத்துவக் கல்லூரி போன்ற ஏனைய காரியங்களுக்காக நிதி பயன்படுத்தப்பட வேண்டுமென்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

காட்டுமன்னார் கோயிலிலுள்ள ஆண்கள் ஆரம்பப் பள்ளிக் கட்டடம்

*** 382 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) சிதம்பரம் தாலுகா காட்டுமன்னார்கோயில் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த காட்டுமன்னார்கோயிலில் இருக்கும் ஆண்களுக்கான யூனியன் ஆரம்பப் பாடசாலை அமைந்துள்ள வாடகைக் கட்டடம் பழுதடைந்து இடிந்த நிலையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) கட்டடத்தின் சில பாகங்கள் செப்பனிடப்பட வேண்டிய நிலையிலுள்ளன.

(இ) செப்பனிட வேண்டிய வேலைகளை மேற்கொள்ள அக் கட்டட உரிமையாளர் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் இப்பள்ளி தற்போதைய இடத்திலிருந்து மற்றொரு கட்டடத்திற்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

சோழவந்தானிலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கம்

*** 383 வினா.—திரு. பி. எஸ். மணியன்** : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் கூட்டுறவு விற்பனைச் சங்கம் (Marketing Society) கலைக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) இச் சங்கத்தை நடத்தியதில் பல ஒழுங்கீனங்கள் கண்டு பிடிக்கப்பட்டதால், இச்சங்கத்தின் நிர்வாகக் குழு கலைக்கப்பட வேண்டும் என்றும், தனி அதிகாரி நியமிக்கப்பட வேண்டுமென்றும் 1966-ஆம் ஆண்டு மே மாதத்தில் கட்டளையிடப்பட்டது. இச் சங்கத்தை மூடிவிடும்படி Liquidate செய்யும்படி 1969-ஆம் வருடம் அக்டோபர் மாதம் கட்டளையிடப்பட்டது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, இந்த விற்பனைச் சங்கம் கலைக்கப்பட்டு பல ஆண்டுகளாகிவிட்டன. அந்தச் சங்கத்தின் நிர்வாகஸ்தர்கள் மாவட்ட அதிகாரிகளைத் தங்கள் வசம் படுத்தி, தப்பித்துக் கொள்ள முயற்சிசெய்கிறார்கள். ஆகவே, உயர்மட்ட அதிகாரி ஒருவரைப் போட்டு இச்சங்க நிர்வாகஸ்தர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?